**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

2003ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் நல்வாய்ப்புகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் அளவற்ற வளங்கள் அனைத்தும் வாய்க்கப் பெறும் தனது உன்னத இலட்சியத்தை நோக்கி இந்த 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீறுநடைபோடும் என்று நான் உறுதிபட நம்புகிறேன்.

2. அண்மையில் நிறைவுற்ற ஆண்டு பல கொந்தளிப்பான சம்பவங்கள் நம் நாட்டில் நடந்துள்ளதைக் கண்டது. மும்பை மற்றும் ஹைதராபாத்வரை பரவியதோடல்லாமல் கோயம்புத்தூரிலும் எதிரொலித்த பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் அளித்துவரும் தொடர் ஆதரவினால், 2002 ஆம் ஆண்டில், இந்தியா, பாகிஸ்தானுடன் கிட்டத்தட்ட போரிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. பயங்கரவாதம்

வளர்த்துவிடும் வன்முறையின் கோரம், தற்போதைய உண்மை நிலையை உணர்த்துவது மட்டுமன்றி, அனைத்து மாநிலங்களிடையேயும் பரந்தோடியுள்ளது. இத்தகைய அச்சுறுத்தலை எதிர்த்து சமாளிக்க மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறையும், அனைவருடைய நிலையான விழிப்புணர்வுகளும் அவசியமாகின்றன. பகைவர்களின் தாக்குதல்களிலிருந்தும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற தங்களின் இன்னுயிரை ஈந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசின் உதவியையும், ஆதரவையும் அளிக்க இந்த அரசு நிலையான உறுதிபூண்டுள்ளது. இத்தகைய உன்னதப் பணிக்காகத் தங்களின் உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு நாம் வீரவணக்கம் செலுத்துகிறோம்.

**3.** பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் கொடிய நிழல், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அண்டவிடக்கூடாது என்று இந்த அரசு உறுதியுடன் தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தின்மூலம், பயங்கரவாத தடுப்பு (POTA) சட்டத்தை இயற்றுவதில் இந்த அரசு

மத்திய அரசுக்குத் தன்னுடைய முழு ஆதரவை அளித்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அமைப்பு (LTTE) மீதான தடை, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மீட்புப் படை(TNRT) மற்றும் தமிழ்நாடு விடுதலைப்படை(TNLA) ஆகிய அமைப்புகள், இந்த அரசினால் 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழும், அதைத் தொடர்ந்து மத்திய அரசினால், 2002 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்புச் (POTA) சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ளன. நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க, மத்திய அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும், இந்த அரசு தன்னுடைய முழு ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும்.

4. 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், சட்டம், ஒழுங்கு திறமையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். சிறுபான்மையினரின் சமய விழாக்கள் உள்பட அனைத்து சமய விழாக்களும், அமைதியான முறையில் நடைபெற்றன. பல ஆண்டுகளுக்குப் பிறகு, சிவகங்கை மாவட்டத்தில், கண்டதேவி தேர்த்திருவிழா வெற்றிகரமாக

நடத்தப்பட்டது என்பது இந்த அரசு, நிலைமையை எவ்வாறு திறமையாகக் கையாண்டுள்ளது என்பதற்கு ஒரு சான்றாகும். தருமபுரி மற்றும் வேலூர் மாவட்டங்கள், 1970 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில், நக்ஸலைட்டுகளின் தீவிர நடவடிக்கைகளுக்குட்பட்ட இடமாக இருந்தன. இந்த அரசு, தனது முந்தைய ஆட்சி காலத்தில், அதாவது, 1991–1996 ஆம் ஆண்டுகளில் எடுத்த திடமான, கடுமையான நடவடிக்கைகளினால்தான், மாநிலத்தின் இப் பின்தங்கிய பகுதிகளில் அமைதி மீண்டும் திரும்பியது. 1999ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசு, இக்கண்காணிப்புப் பணியில் காட்டிய தொய்வின் காரணமாக, இப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது. தருமபுரி மாவட்டத்தில், ஒரு ரகசிய இடத்தில் நக்ஸலைட்டு கும்பல் கூடியபோது, சேதம் எதனையும் அந்தக் கும்பல் விளைவிப்பதற்கு முன், அந்தக் கும்பலை இந்த அரசு செயலிழக்கச் செய்தது. இத்தகைய கும்பல்கள் மாவட்டத்தில் நிலவிவரும் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சாதகமாக்கிக் கொண்டு குழப்பங்களை விளைவிப்பதைக் கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கையுடன் கூடிய தயார்

நிலையைத் தொடர்ந்து பேணுவதோடு, இத்தகைய ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் பரவலாக நடைமுறையில் உள்ள கந்துவட்டி முறையை ஒழிக்க புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான இந்த அரசின் முடிவை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளார்கள். சமூக அளவில் நிலவும் பதட்டத்தைத் தீர்க்க இது பெரிதும் உதவும். உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்ததன் மூலம், கோயம்புத்தூரில் தவறாக வழிநடத்தப்பட்ட மதவெறியர்களின் வகுப்புவாத மோதல் முயற்சிகள் தகர்க்கப்பட்டன. தீவிரவாதம், பிரிவினைவாதம், மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தனது தீர்மானத்தை இந்த அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**5.** காவல் துறையை நவீனமயமாக்குவது, சட்டம்–ஒழுங்கை திறமையாகப் பராமரிப்பதற்கு இன்றியமையாத தேவையாகும். இவ்வரசு, இரண்டாண்டுகளில், ரூபாய் 272 கோடி செலவில் காவல்

படையை நவீனமயமாக்குவதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. ஒப்பற்றதும், முன்னெப்போதும் இருந்திராத புதிய நடவடிக்கையாகக் காவல் துறையினரின் குறைகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் பிற பதவித் தரங்களைச் சார்ந்தவர்களுடன் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஐந்து நாட்களில் ஐந்து விரிவான கூட்டங்களை நடத்தினார்கள். காவல்படையின் மனஉறுதியைப் பேணுவதில் உள்ள சிக்கல்களை நான் நன்கு அறிந்துள்ளதால், நாட்டில் இதற்குமுன் எந்தவொரு முதலமைச்சரும் எடுத்திராத மனஉறுதியூட்டும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்ட விழைகிறேன். தமிழ் நாட்டில் முதன் முறையாக அனைத்து மகளிர் காவல்படை ஒன்றை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும். பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக, அனைத்து மகளிர் அதிரடிப் படைப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காவல் துறை, நாட்டிலேயே சட்டத்தை நிலைநாட்டுவதில் மிக

ஆயத்தப்படுத்தப்பட்ட உரிய பயிற்சி பெற்ற அமைப்பாகத் திகழ அனைத்து மகளிர் காவல் நிலையங்களை வலுப்படுத்துதல், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**6.** இவ்வரசு, கருநாடக அரசின் முன்னாள் அமைச்சரான திரு. ஹெச். நாகப்பா அவர்கள், சந்தனமரக் கடத்தல் வீரப்பனால் கொடுமையான முறையில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கிறது. அவருடைய பிரிவால் வாடுகின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவிக்க விழைகிறேன். வீரப்பனைப் பிடிப்பதற்காக, இரு மாநிலங்களின் சிறப்பு பணிப் படையினரும், விரைவான மற்றும் தொடர் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால் திரு. நாகப்பா கடத்தப்பட்டதையடுத்து, கருநாடக அரசு, அனைத்து தேடுதல் பணிகளையும் காலவரையறையின்றி நிறுத்திவைத்தது. தமிழ்நாட்டின் சிறப்புப் பணிப்படையின் அனைத்து தேடுதல் நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்குமாறும் கருநாடக வனப் பகுதியிலிருந்து

அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் கருநாடக அரசு, தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையை அதிகாரப்பூர்வமாகக் கேட்டுக்கொண்டது. இவையனைத்தும் பயனளிக்கவில்லை என்பது திரு. நாகப்பா கொலையுண்டதிலிருந்து தெரியவருகிறது. சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கொடுமையான நடவடிக்கைகளுக்கு விரைவில் முடிவுகட்டப்பட வேண்டும். தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையினர், கருநாடக சிறப்புப் பணிப்படையினருடன் நெருங்கி ஒத்துழைத்து தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையினரின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும். தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பயங்கர கொள்ளைக்காரனான வீரப்பனின் கொடுஞ் செயல்களுக்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க, கடுமையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7. தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேற்கொண்ட இடையறா முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டுக்கு, நாளொன்றுக்கு 1.25 டி.எம். கன அடி நீரைத் திறந்துவிட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் கருநாடக மாநிலத்திற்கு உத்திரவிட்டது. ஆனால்,

துரதிஷ்டவசமாக இந்த உத்தரவையோ, விநாடிக்கு 9000 கன அடி நீரைத் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நதிநீர் ஆணையம் தொடர்ந்து பிறப்பித்த உத்தரவையோ கருநாடகம் மதித்து நடக்கவில்லை. உத்தரவுகளைத் தொடர்ந்து மீறும் கருநாடக அரசின் இத்தகைய செயல்பாடுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் கூட்டாட்சி அமைப்புகளின் சாரத்தையும், வலிமையையும் கேள்விக் குறியாக மாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. அதன் விளைவாக, நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீரைப் பங்கிட்டுக்கொள்ளும் கோட்பாட்டின் அடிப்படையிலும் கூட, 2002 டிசம்பர் திங்கள் இறுதியில் உள்ள நிலவரப்படி 60.22 டி.எம். கன அடி அளவுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13.1.2003 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, 4.9.2002—லிருந்து பற்றாக்குறையாக உள்ள 18.80 டி.எம். கன அடி தண்ணீரைக் கூட திறந்துவிட கருநாடகம்

தற்போது தயாராக இல்லை. அதன் விளைவாக, காவிரி டெல்டா பகுதியில் இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு உள்ள நடப்பு நெற் பயிர் நம் கண்களுக்கு எதிரிலேயே வாடிக் கருகி வருகின்ற அவலமான நிலை உருவாகியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், கருநாடகம் தற்போது சிறிதளவு நீரைத் திறந்துவிட்டுள்ளது. துரதிஷ்டவசமாக, இந்த சொற்ப அளவு நீர், காவிரி டெல்டா பகுதியிலுள்ள நடப்பு சம்பா பயிருக்கு ஒரு தடவை பாசனம் அளிப்பதற்குக் கூட போதுமானதாக இராது. நிலமையை உணர்ந்து, நல்லெண்ணத்துடன் நடப்புப் பயிர்களுக்கு மேலும் ஒரு தடவை பாசனம் அளிப்பதற்கு ஏதுவாக, போதுமான அளவுக்கு நீர் திறந்துவிடப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**8.** காவிரி நதிநீர் தாவாவினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் களையவும், காவிரி டெல்டா பகுதியில் முன் எப்போதும் காணாத அளவுக்கு வறட்சியினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைத் தணிக்கவும், இவ்வரசு பெருமளவிலான நிவாரணப்

பணிகளை மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002, ஜுன் திங்களில் தஞ்சைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மூன்று டெல்டா மாவட்டங்களிலும் ரூபாய் 164.18 கோடி செலவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்தார்கள். இந்த நிவாரணத் திட்டம், நன்கு வரவேற்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களிலுள்ள சுமார் 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 21 கோடி செலவில் தீபாவளி பரிசுப் பொருட்கள் அடங்கிய பைகள் விநியோகிக்கப்பட்டன. நடவு செய்த சம்பா பயிர்களில் 40 சதவீத அளவிற்கு மட்டுமே தற்போது காப்பாற்றப்படலாம் என்பது தெளிவாகியுள்ளது. இது பேரிடராகும். மத்திய அரசு, இதை, முன் எப்போதும் ஏற்பட்டிராத தேசிய அளவிலான இயற்கைச் சீற்றமாகக் கருத வேண்டும். டெல்டா பகுதி விவசாயிகள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. விளைச்சலை இழந்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 5,000 வீதம் ரூபாய் 400 கோடி அளவுக்கு நிவாரண உதவி

வழங்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலுவாக எடுத்துரைத்துள்ளார்கள். டெல்டா பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அசல் தொகையை கடன் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உள்ளிட்ட கடன் நிவாரணத் திட்டம் ஒன்றையும், விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கான மதிய உணவுத் திட்டத்திற்காக 2 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். கோரப்பட்டுள்ள நிவாரணம், மத்திய அரசினால் உடனே வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

**9.** தமிழ்நாடு, தண்ணீர் பற்றாக்குறையுள்ள ஒரு மாநிலமாகும். பல நூற்றாண்டுகளாகப் பெற்றுவந்த தண்ணீரின், அளவைத் தற்போது பெறுவதற்குக்கூட அது கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. கேரளஅரசு, பவானி ஆற்றின் குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டி, அதன் நீரைத் திருப்பிவிட மேற்கொண்டுள்ள நடவடிக்கை, தமிழ்நாட்டின் மீது விழுந்துள்ள மற்றுமொரு அடியாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினையை, கேரள முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, சிற்றணை கட்டுவதை கைவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இவ்வரசு, இந்தப் பிரச்சினை தொடர்பாக, காவிரி நீர் தாவா நடுவர் மன்றத்தை அணுகி, சிற்றணை கட்டுவதற்கு எதிராகத் தடையாணை பிறப்பிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

**10.** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதற்கொண்டு, அனைத்து பெரிய நதிகளையும் நாட்டுடைமை ஆக்குவதன்மூலம், நீர்வள வாயில்களை நிருவகித்து, நீர் வளத்தினைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள, ஒரு தேசிய தொலைநோக்கு பின்பற்றப்பட வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், **1984** ஆம் ஆண்டிலேயே, மாநிலங்கள் அவையில் உரையாற்றியபோது, கங்கை காவிரி இணைப்புத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்ற தனது உணர்ச்சிமிகுந்த கோரிக்கையை வலியுறுத்தினார்கள். நதிகளை இணைப்பதற்கான பணிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளதை இந்த அரசு

வரவேற்கிறது. முதலமைச்சர் அவர்கள், 2002 ஆம் ஆண்டு டிசம்பரில், புதுடில்லியில் நடைபெற்ற ஐம்பதாவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் உரையாற்றுகையில், பத்தாவது திட்டகாலத்திலேயே, மகா நதி மற்றும் காவிரி நதிகளை இணைக்கும் வகையில் நதிகளை இணைக்கும் இத் தொடர் பணியை முடிக்க வேண்டுமென மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். அவ்வாறே, தென்னக தீபகற்பத்தில், மேற்கு நோக்கிப் பாயும், பம்பா அச்சன் கோயில் நதியை, வைப்பாறு நதியுடன் இணைப்பது போன்ற நதிகளை இணைக்கும் பணியையும் பத்தாவது திட்ட காலத்திலேயே மேற்கொண்டு முடிக்க வேண்டுமென மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

11. தமிழ்நாடு, தன்னுடைய வரலாற்றிலேயே, மிகக் கடுமையான வறட்சி நிலையைச் சந்தித்து வருகிறது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததும் கருநாடகம் விடாப்பிடியாக நீரைத் திறந்துவிடாததும் ஆகிய இரண்டும் சேர்ந்து காவிரி டெல்டாப் பகுதியை வறண்ட பூமியாக மாற்றியுள்ளது. இந்த அரசு அளித்த வறட்சி நிலைமை குறித்த புள்ளி விவரங்களின்

அடிப்படையில், மத்திய அரசு, சில வறட்சி நிவாரண செலவிற்கு ஒப்புதல் அளித்தது. நடப்பு ஆண்டில், இதுவரை, வறட்சி நிவாரணம் குறித்து செய்யப்பட்ட செலவு ரூபாய் **142.80** கோடி ஆகும். வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் **50,000** மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டு அப்பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. முந்தைய மதிப்பீடு, தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் பின்னணியில் செய்யப்பட்டதாகும். நன்கு தொடங்கிய வடகிழக்குப் பருவ மழையும், நம்மை ஏமாற்றியது. இது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி இவ்வரசு சென்னை நீங்கலான அனைத்து **28** மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க முடிவு செய்துள்ளது. **28** மாவட்டங்களிலும் ஒட்டுமொத்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இது உதவும். மேலும் கூடுதலான நிவாரண உதவி அளிக்க வேண்டுமென நாம் மத்திய அரசை மீண்டும் அணுகுவோம். கூடுதல் உணவு தானிய ஒதுக்கீட்டைப் பெற்று, கோடைக்காலம் முழுவதும் ஊரகப்பகுதிகளில் போதுமான அளவிற்கு

வேலைவாய்ப்புகள் அளிக்கும் வண்ணம் பணிகள் நடப்பதை உறுதி செய்வோம்.

**12.** வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனது, சென்னைக்குக் குடிநீர் வழங்குவதில் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள குடிநீர் வழங்கலை சிக்கனப்படுத்த, அரசு, விரைவாக நடவடிக்கை எடுத்துள்ளது. அண்மையில் ஹைதராபாத் சென்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்து, சென்னைக்கு, கிருஷ்ணா நதி நீரை விரைவில் திறந்துவிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார். பருவமழை பொய்த்ததால் ஆந்திரப் பிரதேச நீர்த்தேக்கங்களிலுள்ள நீரின் சேமிப்பு அளவும் மிகவும் குறைவாக உள்ளது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து விரைவில் தண்ணீரைத் திறந்து விடுவதாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரும் உறுதியளித்துள்ளார். அதுவரையில், நாம், இருப்பில் உள்ள நீரை, அறிவார்ந்த முறையில் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. புதிய வீராணம் திட்டம் போன்ற நடுத்தரக்கால தீர்வுகளையும் இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அப்போதுதான்,

இனி வருங்காலத்தில் இம்மாதிரியான கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க இயலும்.

**13.** தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைவற்ற மாநிலமாகவும், பசிப்பிணியற்ற மாநிலமாகவும் மாற்றுவது என்பது வெறும் வாய் வார்த்தையாக மட்டுமே இருந்துவிடலாகாது. முன் எப்போதும் ஏற்பட்டிராத வறட்சியும், தண்ணீர் பற்றாக்குறையும் உள்ள இத்தகைய கால கட்டத்தில்தான், இத்தகைய இடர்ப்பாடும், தேவையும், வெளிப்படையாக நமது கவனத்திற்கு வருகின்றன. வறுமையில் வாடுகின்ற சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவுத் திட்டத்தினைத் துணிச்சலாகத் தொடங்கியுள்ள முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நான் பாராட்டியே ஆகவேண்டும். இது, பசிப்பிணியற்ற தமிழ்நாட்டை உருவாக்குதல் என்ற கொள்கைக்கு உண்மையான அர்த்தத்தையும் உட்பொருளையும் அளித்துள்ளது. எவரொருவரும் பசிப்பிணியின் கொடுமைக்கு ஆளாக்கப்படமாட்டார்கள். மக்களின் நலனைப் பேணிக்காக்க உறுதிபூண்டுள்ள,

மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒரு மாநிலம் என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வேறு எதுவும் இருக்க இயலாது.

**14.** தமிழ்நாடு போன்ற முன்னணி மாநிலங்களை, அடுத்தடுத்து வந்த நிதிக்குழுக்கள் கடுமையாக தண்டித்துள்ளன. நியாயமான மறுபகிர்வை நிலைநாட்டுவதில் தவறான அணுகுமுறையை இந்த நிதிக்குழுக்கள் தொடர்ந்து கடைப்பிடித்தது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வில் பாதகமும் பின்தங்கிய மாநிலங்களின் செயலாக்கமின்மை, நிதிக்கட்டுப்பாடின்மை மற்றும் செயல்திறன் இன்மைக்கும் பரிசளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. மாநிலங்களின் பெருகிவரும் அதிக வட்டியுடன் கூடிய கடன் சுமை போன்ற கடுமையான பிரச்சினைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. இது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களையும் நிதி இடர்ப்பாடு என்ற ஆழமான படுகுழியில் தள்ளியுள்ளது. நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்கு இத்தகைய இடர்ப்பாடான நிலை முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதன் விளைவாக,

2000–2005 ஆம் ஆண்டு வரையிலான காலஅளவிற்கு, தமிழ்நாட்டுக்கு, ரூபாய் 2946 கோடி அளவுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்தகால நிதிச் சீர்குலைவாலும், கடன் நிவாரணத்திற்கான யாதொரு திட்டமும் இல்லாததினாலும், கடனில் மூழ்காமல் சமாளிப்பதற்கு, தமிழ்நாடு கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான டாக்டர் சி.ரெங்கராஜன் அவர்களின் தலைமையில் பன்னிரெண்டாவது நிதிக்குழு அமைக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். பழைய பாதையிலேயே செல்லாமல், தங்களுடைய நிதிநிலைமையை பேணிக்காத்துள்ள மாநிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில், பன்னிரெண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் அமையும் என்று நம்புகிறோம்.

15. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் ஆற்றிய அவருடைய உரையில், நேரடி வரிகள் குறித்த பணிக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை ஏற்பதில் உள்ள கடுமையான இடர்ப்பாடுகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். உயர் சேமிப்பு வீதம், அதிக

முதலீட்டிற்கு வழிவகுக்கும் என்ற உள்ளார்ந்த ஊகத்தின் பேரில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறு சேமிப்புக்கான அனைத்து ஊக்கத் திட்டங்களையும் திரும்பப் பெறும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கவே முடியாமல் செய்துவிடும். வீட்டு வசதிக்காகச் செய்யப்படும் முதலீட்டுக்கான ஊக்கத் தொகைகளையும் கணிசமாகக் குறைத்துவிடும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. வீட்டுவசதித் துறையில் காணும் முன்னேற்றம், பொருளாதாரத்தின் பல நிலைகளில் பரிணமிக்கிறது என்பதை யாவரும் அறிவர். அத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, சிறுசேமிப்பு மற்றும் வீட்டுவசதித் துறைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களைத் தக்க வைக்கும்படி இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது.

**16.** இந்த அரசு, **2001** மே திங்களில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, என்றும் இல்லாத அளவிற்கு நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒருமுறை மானியமாக ரூ.**3000** கோடி நிதியுதவி வழங்க

வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள். இது கிடைக்கவில்லை. உடனிகழ்வாக, உலகவங்கி போன்ற வெளிநாட்டு முகவரமைப்புகளும், 2001 ஆம் ஆண்டிற்கு முன் மாநில அரசு நிதி சீர்திருத்தங்களை மேற்கொள்ளாததால், திட்டம் அடிப்படையிலான கடன்களைக் கூட நிறுத்திவைத்தன. எனவே, நிதி சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதவையாக ஆகியுள்ளன. நிதி நெருக்கடி என்பது புதியதொன்றும் அல்ல என்ற ஒரு தவறான கருத்து பரவலாக நிலவுகிறது. துரதிஷ்டவசமாக, இந்த மாநிலம் சந்தித்துவரும் நிதி இடர்ப்பாடானது, முன்பு எப்போதும் இல்லாத தன்மையுடையதாகும். மிகையான கடன் சுமையாலும், நடப்பு செலவுகளுக்குப் போதாத நடப்பு வருவாயாலும், தமிழ்நாடு தனது, வளர்ச்சிப் பாதையை முற்றிலும் விட்டுவிட்டு தனது கடமைகளை ஆற்றுவதிலிருந்து தவறுகின்ற அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

17. நமது மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைக்கவும், நம்பகத் தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திலும், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள், நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை மிகத்துணிச்சலுடன் எடுத்துள்ளார்கள். இந்த மாநில அரசு, நிலை குலைந்துபோகாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்த நிதி சீர்திருத்தங்கள் அவசியமானதே ஆகும். நாம் நலமுடன் இருக்க வேண்டுமாயின், இத்தகைய கசப்பான மருந்துகளை உட்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. தற்போதுள்ள நிதிச் சீர்குலைவின் தன்மையையும், கடுமையையும் பார்க்கும்போது, இந்த நிதி சீர்திருத்த திட்டம், பல்வேறு துறைகளில் பல்வேறு நடவடிக்கைகளைக் கொண்ட நடுத்தர கால திட்டமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாநிலத்தின் நிதி நிலைமையை மீண்டும் சீர்படுத்த கடும் முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்நின்று எடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நிதிநிலைமையை முழுமையாக சீர்படுத்த மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளன. இது, நிதி மேலாண்மையில் கையாள வேண்டிய பொறுப்புணர்வை முன்னிலைப்படுத்துகிறது. மாநில அளவில், வலுவான நிதி நிலைமையில் எந்தெந்த கோட்பாடுகள் உள்ளடங்கியுள்ளன என்பது பற்றிய

பரவலான ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இவைகளை, நிதி மேலாண்மையில் பொறுப்புணர்வு பற்றிய ஒரு சட்டத்தில் வழிகாட்டு கொள்கைகளாக தொகுக்க முடியும். இந்தக் குறிக்கோளை நோக்கி நாம் பணியாற்றவும் இயலும். அப்போதுதான், மாநிலத்தின் நிதி நிலையைப் பாதிக்கக்கூடிய இத்தகைய பிரச்சினைக்குரிய நிலை, மீண்டும் ஏற்படாமல் அமையும்.

**18.** மாநிலத்தின் நிதி இருப்புகளில் காணும் மோசமான நிலையைக் கருதிப்பார்க்கையில், ஐந்தாண்டு திட்டம் ஒன்றை வகுப்பதற்கான வாய்ப்புகள் கூட எட்டாத கனவாகத் தோன்றலாம். நிதி சீர்திருத்தங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது ஒருமித்த கவனத்தை செலுத்தியிருப்பதால், இம்மாநிலத்திற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை **(2002–2007)** மாபெரும் அளவில் ரூபாய் **40,000** கோடி ஒதுக்கீடு கொண்டதாக மாநில அரசால் எடுத்துரைக்கப்பட்டு, அதற்கு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலையும் பெற முடிந்துள்ளது. சிறப்பானதும், செயலாக்கக்கூடியதுமான வளர்ச்சித் திட்ட பொருள் நிரல் ஒன்றினை வகுத்ததற்காக

நான் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த மாநிலத்தில் நிலவும் நிதிப் பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்போது இதை ஒரு சாதாரணமான வெற்றியாகக் கருத இயலாது.

**19.** தமிழ்நாட்டு மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிவுடன் மாபெரும் கனவு கண்டுள்ளார்கள். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 8 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்த வேண்டுமென்ற இலக்கை இந்த அரசு வகுத்துக் கொண்டுள்ளது. தேசிய இலக்கிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது 2010 ஆம் ஆண்டிற்குள், மாநிலத்தின் நபர்வாரி வருமானம் இருமடங்காக உயரவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குத் திட்டத்தை வகுத்துள்ளார்கள். நான்குவழி அணுகு முறை ஒன்றைப் பின்பற்றுவதன்மூலம், இதனை எய்த இயலும். இதில், புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்; சிறப்பான நிருவாகம்; சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் ஆகியவை அடங்கும். மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சி முழுமையையும் உள்ளடக்குகிறது. 2002 டிசம்பரில், தேசிய வளர்ச்சி குழுவின் ஒப்புதலுடன் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுவதானது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

20. முதன்மைத் துறைகளின் செயல்பாட்டில், குறிப்பாக வேளாண்மைத் துறையின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாபெரும் இலக்குகளை எய்துவதில் முக்கிய காரணியாக விளங்குகிறது. முதன்மைத் துறைகளில் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், புதிய வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் அரசு நன்கு வடிவமைக்கப்பட்ட திட்ட அணுகுமுறைகளை வகுத்துள்ளது. நீர்வரத்துப் பகுதி அணுகுமுறை அடிப்படையில் அமைந்த ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு

நிலங்களை, வேளாண்–ஆய்வு அடிப்படையிலான (Agri-clinical) அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கையின் கீழ் கொண்டுவரவேண்டும். இரண்டாவதாக, தரிசு நில மேம்பாட்டுப் பணிகளிலும், அவற்றுடன் இணைந்த பதப்படுத்தும் தொழில்களிலும், தொழில் கூட்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். இதற்கான துவக்கப் பணிகள் 7 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தைச் சேர்ந்த 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ரூபாய் ஒரு கோடி முதலீட்டுடன் வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தனிக் கவனம் செலுத்துவது மூன்றாவதாக அமையும். இத்திட்டத்தின்படி ரூபாய் 227.41 கோடி திட்டச் செலவில், 182 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தவிருக்கும் 258 செயற்குறிப்புகள், பரிசீலனையில் உள்ளன. ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாடு குறித்த இந்த அணுகுமுறை, முதன்மைத் துறைகளில் வளர்ச்சி வேகத்தை மீளக்

கொண்டுவரும். மேலும், இது மாநிலத்தின் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற பயனுள்ளவகையில் மதிப்பு கூட்டும் புதிய நடவடிக்கைகளை ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்தும்.

**21.** தொடர்ந்து காணப்படும் நீர்ப் பற்றாக்குறைகள், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் மந்தநிலை, முதன்மைத் துறைகளில் வருவாய் தேக்கநிலை ஆகியவை ஊரகப் பொருளாதாரத்தை கடும் நெருக்கடி நிலைக்கு உட்படுத்தியுள்ளன. அரிதாகக் கிடைக்கும் நம்முடைய நீர் ஆதாரங்களைத் திறம்பட நிருவகிப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருத்தமான முறையில் நகரப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் மழை நீர் சேமிப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்டுள்ள சிறிய ஏரிகள், கிராமக் குளங்கள், நீர் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் தூர் வாரும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், வேலைக்கு உணவு திட்டத்தின் (Food for Work) ஓர்

அங்கமாக இந்த கோடைகாலத்தில் போர்க்கால அடிப்படையில் செயற்படுத்தப்படும். அதே போன்று, 100 ஏக்கருக்கும் அதிகமான ஆயக்கட்டினைக் கொண்ட பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஏரிகளை தூர்வாரி, நிலை உயர்த்தும் பெரும் திட்டமொன்றும் தொடங்கப்படும். ரூபாய் 2900 கோடி செலவில் செயற்படுத்தப்படவுள்ள நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்–II ஐ தொடங்குவதற்கு அனுமதி கோரியும், அனுமதி வழங்கப்படும்வரை தற்போதுள்ள திட்டத்தைத் தொடர அனுமதிக்குமாறும், உலக வங்கியை, இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது.

22. நமது மாநிலம் தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறை உடைய மாநிலமாக அமைந்துள்ளது தற்போதுள்ள உண்மை நிலை. எனவே, அதிக அளவு நீர் தேவைப்படும் பயிர்களை உழவர்கள் தொடர்ந்து பயிரிட இயலாது. அதிக அளவு நீரைப் பயன்படுத்தும் உழவர்களின் நடைமுறைகளையும் இந்த வகையில் அவர்களிடையே மலிந்துள்ள பழமைவாதக் கருத்துக்களையும் மாற்றி உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு, கூடுதல் விலை மதிப்புள்ள பயிர்களையும், குறைந்த அளவு நீர் மட்டுமே தேவைப்படும் வணிகப்

பயிர்களையும் பயிரிடச் செய்வதற்கும், தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கும், மூலிகைச் செடிகளைப் பயிரிடச் செய்வதற்கும் தேவையான ஒரு முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர்காப்பு மேலாண்மையில் அதி நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், திறமையான முறையில் நீரைப் பயன்படுத்துதல், சிக்கனமான செலவில் பண்ணை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் உழவர் சமுதாயம் ஊக்குவிக்கப்படும். புன்செய் வேளாண் மண்டலங்களில், செம்மறி ஆடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படுவதுடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை நிருவாகத்தை ஊக்குவிக்க, பல்வகை கூட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அதிக அளவு நீரைப் பயன்படுத்தும் போக்கிலிருந்து உழவர்களைக் காத்து, அவர்களுக்கு துணை வருமானம் ஈட்டுவதற்கு வகை செய்வதன் மூலம், பருவ மழையின் போக்கினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் தவிர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

**23.** முதன்மைத் துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், புதிய வாய்ப்பு வளங்களைப்

பெருக்குவதற்கும், ஒட்டுமொத்தமாக ஊரக அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாத அம்சமாகும். எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைக்க வகை செய்யும் பொருட்டு, ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி செய்துதரும் பொருட்டு, இந்த ஆண்டில், ரூபாய் 19.14 கோடி செலவில் 19,142 கச்சா வீடுகள் மேம்படுத்தப்படுவதுடன், மொத்தம் ரூபாய் 141.46 கோடி செலவில் 43,580 வீடுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். அடுத்துவரும் ஐந்தாண்டுகளில், மொத்தம் ரூபாய் 40 கோடி செலவில், பீடித் தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய 10,000 வீடுகள் கட்டித்தரப்படும். மகளிருக்கான, எஞ்சியுள்ள 6,309 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டும் பணியை 2003ஆம் ஆண்டில் அரசு செய்து முடிக்கும். இத்திட்டத்திற்கு அதிக அளவு ஆதரவு இருப்பதைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில்

முன்னோடி அடிப்படையில், ஆண்களுக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**24.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டாம் வகை துறையைப் பொருத்தவரை ஏற்றுமதி வளர்ச்சி நோக்கில் அமைந்த முன்னேற்றம் என்கின்ற தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வரசு, உற்பத்தித் துறையில் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக இரண்டாம் நிலை சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்ற முனைந்துள்ளது. நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், தொழில் நடத்தலில் தேவையற்ற செலவுகளைக் களைதல், கட்டுப்பாடுகளை அகற்றுதல், துறைமுகங்கள் மற்றும் சுங்கத்துறை ஆகியவற்றில் தொழில்முறை கால விரயத்தைக் குறைத்தல், வட்டி வீதங்களைக் குறைத்தல், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயம் முதலியவை இதில் அடங்கும். இம்மாநிலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பொதுத் துறையுடன் தனியார் துறை இணைந்து செயல்படுவதை எளிதாக்க இயலும் வகையில்

சட்டமொன்றை இயற்ற இவ்வரசு கருதியுள்ளது என்று உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வரசின் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Special Economic Zone) குறித்த புதுமைக் கொள்கை ஒன்று உருவாகும் நிலையில் உள்ளது. அக்கொள்கை, ஏற்றுமதி நோக்கில் அமைந்த தொழில் பிரிவுகளுக்கு தனி ஊக்கம் அளிக்கும் வகையில், எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி போன்ற புதிய பகுதிகளுக்குப் பொருந்தியதாக அமையும். சென்னை மற்றும் திருப்பூரில் ஆடை பூங்காக்கள் (Apparels Park) அமைப்பதற்குத் தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளது. இவை, இம்மாநிலத்தில் துணித் தொழிலுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும்.

**25.** தேசிய பொருளாதாரக் கொள்கை தாராளமயமாக்கப்பட்டிருப்பதால், தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்கள், உள்நாட்டு அளவிலும், பன்னாட்டு அளவிலுமுள்ள போட்டியாளர்களுக்கிணையாக, தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளும் பெரும் சவாலை எதிர் நோக்கியிருக்கின்றன. தொழில்நுட்பத்தை நிலையுயர்த்துவதற்கும், சிறுதொழில் துறைகளின்

தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்றதொரு புதிய கொள்கைத் திட்டத்தை வகுக்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அரசுக் கொள்முதல் நடவடிக்கைகளில், சிறு தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கையை இந்த அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. போட்டியாளர்களுக்கு இணையாக அமையும்படி சிறு தொழில்களின் அனுகூலங்களை வலுப்படுத்தி, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையில் சிறு தொழில்கள் தமக்கு உரிய இடத்தை பெறுவதற்கு உதவும்வகையில் கடும் முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

**26.** நீலகிரி மாவட்டத்தில், சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களின் துயரைத் தணிக்கும் நோக்கத்துடன், பொது விநியோக முறையின் மூலம், "ஊட்டி தேயிலை" என்ற பெயரில், தேயிலை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களிடமிருந்தும், தேயிலை நுகர்வோரிடமிருந்தும் இத்திட்டத்திற்கு பெருமளவு வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில்

நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "ஊட்டி தேயிலை" விற்பனை **4,075** மெட்ரிக் டன் அளவையும் விஞ்சி, ரூபாய் **30.56** கோடி வருமானத்தை ஈட்டியுள்ளது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களுக்கு நல்ல வருமானம் ஈட்டித்தருவதை உறுதி செய்வதற்கும், ஒளிவு மறைவற்ற விற்பனையை உறுதி செய்யவும், குன்னூரில், "டீசெர்வ்" (Teaserve) என்றழைக்கப்படும் ஏல விற்பனை மையம் விரைவில் செயல்படத் துவங்கும். தேயிலை பயிரிடுவோர்க்கு நியாய விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டு, 'விலை நிலைப்பாட்டுத் திட்டத்தைச்' செயல்படுத்துமாறு, இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தும். தேயிலைத் தோட்டங்களில் விளைச்சலைப் பெருக்கவும், தேயிலை உற்பத்தியை மேம்படுத்தவும், பொருத்தமான ஏனைய ஊடு பயிர்களை மதிப்புக்கூட்டு அம்சங்களாக, பயிரிட வகைசெய்யும்படியாகவும் இருமுனை அணுகுமுறை ஒன்று பின்பற்றப்படும்.

**27.** துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கியிருந்ததன் மூலமும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவிய கடும் நிதி நெருக்கடிப் பிரச்சினைகளினாலும் தமிழ்நாட்டில் கைத்தறித் துறை,

முன் எப்போதும் இருந்திராத நெருக்கடியைச் சந்தித்தது. இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை, சந்தை அடிப்படையில் அமைந்த புதிய திட்டமாக முழுமையாக மாற்றி மறுவடிவமைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்கள். இத்திட்டம், மாநிலத்திற்குள்ளேயும், வெளியேயும் பொது மக்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசு, வேட்டி, சேலை வாங்கி, விற்பனை செய்வதற்காக இதுவரை, ரூபாய் 79.84 கோடி அனுமதித்துள்ளது. 1998 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கவேண்டிய ரூபாய் 27.50 கோடி வட்டி நிலுவை உதவித் தொகையை இந்த அரசு கொடுத்துள்ளது. இது, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியுள்ளது. பழைய இருப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. துணிகளின் இருப்பு அளவு குறைந்துள்ளது. விற்பனை வாய்ப்புகளுக்கு ஏற்ற நவீன மயமாக்கும் திட்டம் குறித்த நடவடிக்கைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

**28.** பணிகள் துறையை மேம்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இலக்குகள் குறித்த இவ்வரசின் முக்கிய நோக்கங்களை எய்தப் பெறலாம். இவ்வகையில் விரைந்த வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பவியல் தகுந்ததொரு உந்து விசையாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இம் மாநிலம், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான மையமாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தகவல் தொழில்நுட்பவியல் வாயிலாக உருவாகி வருகிறது. சிறுசேரியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா, ஓர் அறிவுத் திறன் சார்ந்த தொழில்நகரியமாக (Knowledge Industry Township) விளங்கும் வகையில் விரிவாக்கப்படும். சென்னையில் உள்ள காந்தி மண்டபம் சாலையை சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவுடனும், கிழக்குக் கடற்கரைச் சாலையுடனும் இணைப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலை ஒன்று, விரைவில் அமைக்கப்படும். இது, புதிதாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிருவாக நகரம் வரையிலும் உள்ள ஒட்டுமொத்தப் பகுதியையும் முக்கியமான தகவல் தொழில்நுட்பவியல் மையமாக உருவாக்குவதற்கு

ஏதுவாக அமையும். புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது, தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES) மற்றும் நிறுவனங்கள் தங்களது தொழில்முறை தேவைகளை, கொள்முதல் வாயிலாகப் பெறுவது (Business-Process Outsourcing) போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும். உலக வங்கி, ஸ்டேண்டர்டு சார்ட்டர்டு வங்கி, "ஏபிஎன்–ஆம்ரோ வங்கி" (ABN-AMRO Bank) போன்ற நிறுவனங்கள், தங்களுடைய உலகளாவிய செயல்பாடுகளை இங்கே மேற்கொள்ள தெரிவு செய்துள்ளது, சென்னை, ஒரு விருப்பத் தேர்வு இடமாக ஆகிவருகிறது என்பதைக் காட்டுகிறது. இந்த வலுவான கொள்கைத் திறன்களின் அடிப்படையில் நாம் மேலும் செயல்படுவோம்.

**29.** உலகத் தரம் வாய்ந்த சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, வீட்டுவசதி, நகரப் பகுதிப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போதிய அளவிலான மற்றும் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இம்மாநிலத்தில் பெருமளவில் தொழில் முதலீடுகளைக் கவருவதற்கான திறவுகோலாக

அமைகின்றன. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உலகத் தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தனிக் கவனம் செலுத்தப்படும். ரூபாய் **1900** கோடி மதிப்பீட்டுச் செலவில், உலக வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் அனுமதி வழங்கப்படும் இறுதி நிலையில் உள்ளது. இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்படும். உலகத் தரம் வாய்ந்த சாலைகளை உருவாக்குவதில் பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் வகையில் சாலை மேம்பாட்டு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். **2001** ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் சாலைகளைச் சீரமைப்பதில் ஏற்பட்ட பின்னடைவுகளை சரி செய்வதற்காக, **2003** ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்கு முன்னர், ரூபாய் **90** கோடி செலவில் **2500** கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டமொன்றையும், **2003–2004** ஆம் நிதி ஆண்டில், ரூபாய் **180** கோடி செலவில், மேலும், **5000** கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

சேதுசமுத்திரம் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

**30.** பருவமழைகள் பொய்த்ததால், புனல் மின் நிலையங்களுக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலுள்ள நீரின் அளவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அனைத்து வகையைச் சேர்ந்த நுகர்வோருக்கும் மின்சக்தி சீராக வழங்கப்பட்டு வருகிறது. மின்சாரம் வழங்கும் தரமும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. பத்தாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மின் ஏற்பாட்டு முறையை மேம்படுத்துவதற்கும், மின் சக்தி வழங்கும் தரத்தை உயர்த்துவதற்கும் ரூபாய் 8000 கோடி மூலதனச் செலவில், தமிழ்நாடு மின் வாரியம், திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும். பெருகிவரும் மின் தேவையை நிறைவு செய்யும் வகையில், தனியார் துறையில் புதிய மின் உற்பத்தித் திறன்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தனியார் துறையில், 250 மெகா வாட் திறன் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம், 2002ஆம் ஆண்டு டிசம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மற்றொரு 100 மெகா வாட் திறனுடைய

தமிழ்நாடு மின்வாரியத்தின் புதிய மின் உற்பத்தி நிலையம், 2003ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலிருந்து செயல்படவுள்ளது.

**31.** இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு, தனி கவனம் செலுத்தப்படும். பணிகள்சார் துறைகளில் சுற்றுலாத் துறையை ஒரு முக்கிய உந்துசக்தியாக நாம் கருதுகிறோம். முக்கிய சுற்றுலாப் பாதைகளில் தகுந்த அடிப்படை வசதிகள் செய்தல், பொதுத் துறையோடு தனியார் துறையைப் பங்கேற்கச் செய்வதன் மூலம் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விளம்பர உத்திகளை கையாளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி சுற்றுலாத் தொழில் மேம்படுத்தப்படும். ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் மீதான ஆடம்பர வரிகளையும், கேளிக்கையுடன் இணைந்த அறிவுப் பூங்காக்கள் (Amusement and Theme Parks) மீதான கேளிக்கை வரியையும் குறைக்க அண்மைக் காலத்தில் அரசு எடுத்த முடிவு, மாநிலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவினை ஊக்குவிப்பதாக அமைகிறது.

**32.** சென்னைப் பெருநகர்ப் பகுதியை அனைத்து வகையிலும் மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். புதியதொரு நிருவாக நகர் உருவாக்கத் திட்டம், மெரினா நகர்ப்பகுதி புதுப்பிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பது இவ்வகையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். ஓராண்டு, மூவாண்டு மற்றும் பத்தாண்டு கால அட்டவணை கொண்ட சென்னை அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை தயாரிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பது அறிந்து நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் இத்திட்டம், சென்னை மாநகரம் தென் மாநிலத்தின் முன்னோடி நகரம் என்ற நிலையை மீண்டும் எய்தச் செய்யும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பருவமழைக் காலத்தில் கடந்த ஆண்டு இந்நகரம் எதிர்நோக்கிய எல்லாப் பிரச்சனைகளுக்கும், குறைபாடுகளுக்கும் முழுத் தீர்வு கிடைக்கும்படி உரிய

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**33.** சுற்றுச்சூழல் வளம் காக்கும் அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கான அத்தியாவசியத் தேவைகளையும் அடையும் ஒருங்கிணைந்த உத்தி ஒன்றை இவ்வரசு உருவாக்கி வருகிறது. நீடித்த வகையிலான மேம்பாடு, நமது கோட்பாடாக இருக்கவேண்டும். மழைநீர் சேமிப்பு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் நகரப் பகுதிகளில் ஒரு சமூக இயக்கமாகவே உருவாகியுள்ளது. நீரை மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தும் வகையில், அதிக அளவில் நீரைப் பயன்படுத்தும் பொதுக் கட்டடங்கள் அனைத்திலும் சவ்வூட்டின் மூலம் நீரைச் செறிவூட்டும் செயல்முறைக் கலன்களை (reverse osmosis plants) அமைப்பதையும் இவ்வரசு ஊக்குவிக்கும். நமது நகர மற்றும் ஊரகப் பகுதிகளின் இயற்கை வனப்பைக் கெடுக்கின்ற வகையிலும், சுகாதாரத்திற்குக் கேடு ஏற்படுத்தும் வகையிலும், பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பைகளையும், ஏனைய பொருட்களையும் வெளியே தூக்கி எறிவதைத் தடுப்பதற்காக எளிய அம்சங்களுடன்

வடிவமைக்கப்பட்ட சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும். இம்மாநிலத்தில் அரிதாகக் கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கும், அரசு தொடங்கிய இந்த இயக்கத்தில் பங்கேற்குமாறு நான் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**34.** சீர்திருத்த நடைமுறைகளினாலும், நிதி மற்றும் நிர்வாக மேலாண்மையில் மாறுதல் நடவடிக்கைகளினாலும், ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு, முனைப்பானதொரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் அவசியமாகும். இம்மாநில அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டம், வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை கண்ணியத்துடன் சமாளிக்க, தரமான சுகாதார வசதி, கல்வி வசதி ஆகியவற்றை அனைவருக்கும் கிடைக்கச் செய்து, பாதிக்கப்பட்ட, ஏலாமையுற்ற, வயது முதிர்ந்த மற்றும் முதியோருக்கு பாதுகாப்பு அளிக்க, ஊட்டச் சத்து மற்றும் உதவித் தொகை வழங்கல் திட்டம் போன்ற மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் கொண்டுள்ளது. நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான

நிதித் தட்டுப்பாடுகளையும் பொருட்படுத்தாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வலுவுடன் செயல்படுத்த, இந்த அரசு நிலைமாறாத வகையில் முடிவு எடுத்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

**35.** **2001**ஆம் ஆண்டிற்கு முன்னர் பிறப்பு வீதம், சிசு இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் போன்ற முக்கிய சுகாதாரக் குறியீட்டு அளவுகள் தேக்கநிலையை அடைந்துள்ளது குறித்து இம்மாநில அரசு, அதிக கவலை கொண்டுள்ளது. இப்போக்கு சரி செய்யப்பட்டு விரைவான முன்னேற்றம் உறுதிசெய்யப்பட வேண்டியுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் ரூபாய் **650** கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம், விரிவான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம், வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். தரமான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள சுகாதாரத் துணை மையங்கள் நிலையுயர்த்தப்படும். ஊரகப் பகுதிகளில், பயன்தரும் வகையில் சுகாதார நலப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், கிராம சுகாதார செவிலியர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

தொடக்கச் சுகாதார மையங்களை நிலையுயர்த்துவதற்குரிய திட்டம், படிப்படியாக செயல்படுத்தப்பட்டு இந்த ஆண்டில் இத்தகைய **58** மையங்கள் நிலையுயர்த்தும் பொருட்டு, எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொலைசாதன மருத்துவச் சிகிச்சைத் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது, தொலைதூர மையங்களிலுள்ள நோயாளிகள் தரமான மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற உதவும்.

**36.** ஒரே சமயத்தில் தலைமைச் செயலாளர் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், வஃக்ப் வாரியத் தலைவர், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவர், ஆகிய முக்கிய பதவிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பது முன் எப்போதும் இல்லாதது. மேலும், உண்மையான இரு பாலினர் நேர்மை நெறியை நிலைநிறுத்துவதிலும் மகளிருக்கு அதிகாரம் வழங்குவதிலும் அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டினை எடுத்துரைப்பதற்கு இது

ஒரு மாபெரும் சான்றாகும். திருக்கோயில்களில் பெண்கள் நிருவாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் முதல் முறையாக அனைத்து மகளிர் அதிரடிப்படைப் பிரிவு ஒன்று இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள, நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களில் பெண்களுக்கு **33** சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட முன்வடிவை, விரைவில் நிறைவேற்ற இந்த அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும்.

**37.** தமிழ்நாட்டில், மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது அரசின் உயர் பதவிக்கு நியமனம் செய்தல் என்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. சுமார் **20** இலட்சம் மகளிரைக் கொண்ட, **1.15** இலட்சத்திற்கும் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறம்பட்ட செயல்பாடும், நிதி நடவடிக்கைகளில் நம்பகத்தன்மையும், நாம் மேற்கொண்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களின் மகத்தான வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், சென்னைக்கு அருகில் முதன்

முதலாக ஏற்படுத்தப்பட்ட, மகளிர் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, திண்டுக்கல் மாவட்டத்தில் தொடங்கக் கருதியுள்ள சுற்றுச்சூழலுடன் இணைந்த தொழில் நிறுவனங்களடங்கிய பூங்கா ஆகியவை மகளிர் தொழில் முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கும். மகளிர் உதவி அமைப்புகளைத் தொடங்குதல், நடமாடும் ஆலோசனை மையங்களைத் தொடங்குதல், மகளிர் நீதிமன்றங்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மகளிரிடையே சமூக மற்றும் சட்டப் படிக்கான பாதுகாப்பை அதிகரிப்பதில் பேருதவியாக அமையும். தமிழ்நாட்டில் மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது உண்மையிலேயே நிறைவேறியுள்ளது என்று இங்கே குறிப்பிடுவது சரியாகும்.

**38.** குழந்தைகள் பிழைத்திருப்பதை உறுதி செய்வதுடன் அவர்கள் வலுவான, ஆரோக்கியமான மனநிலையுடன், உடல் வளர்ச்சியடைவதையும் உறுதிசெய்வதில் தமிழ்நாடு பீடுநடைபோடும் தயார்நிலையில் உள்ளது. நிதி நெருக்கடிகள் சுமையாக இருந்தபோதிலும், ஆண்டொன்றுக்கு ரூபாய் **20.98** கோடி கூடுதல் செலவில், காய்கறிகள், சுவையூட்டும் பொருட்கள்

ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டை, பயனீட்டாளர் ஒருவருக்கு **23** பைசாவிலிருந்து **35** பைசாவாக அதிகரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதோடு, அதைச் செயற்படுத்தியும் உள்ளார்கள். சமூகநலத் துறைகள் குறித்த நடப்பு ஒதுக்கீடுகளைக் கூட குறைக்க வேண்டிய தவிர்க்க இயலாத சூழ்நிலை உள்ளபோதும், ஊட்டச் சத்துமிகுந்த உணவு அளிப்பதற்கான நிதியொதுக்கத்தை அதிகரித்துள்ளதன் மூலம் இவ்வரசு தன் அரிய துணிவை வெளிப்படுத்தியுள்ளது. பெண் சிசுக்கொலை எனும் கொடிய பழக்கத்திற்கு எதிராக சமூக உணர்வைத் தட்டி எழுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற ஒப்பற்றத் திட்டங்கள் மூலம் பெண் குழந்தைகளுக்கு சிறந்ததொரு வாழ்க்கை அமைய வாய்ப்பை அளிப்பதில் அரசின் முயற்சிகள் சரித்திரத்தில் சிறப்பு முத்திரைகளாக அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளன.

**39.** அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்கிற இலக்கை எய்துவதற்காக, **1994** ஆம் ஆண்டு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் **33/1995)** இயற்றிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையேச் சாரும். இன்று, தமிழ்நாடு, மக்கள்தொகை வளர்ச்சியில் நிலையான தன்மையை நோக்கி முன்னேறுங்கால், புதிய பள்ளிகளைத் தொடங்குதல் என்பதிலுள்ள முக்கியத்துவம் மாறி, **100** சதவீதக் குழந்தைகள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் அக்குழந்தைகளை தொடர்ந்து பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதற்குமாக முக்கியத்துவம் மாற்றி அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படும் பள்ளி மதிய உணவுத் திட்டம், பள்ளிப் படிப்பில் குழந்தைகளைத் தக்கவைப்பதை உறுதிசெய்கிறது. பாலர்பள்ளி சிறார்கள் மற்றும் பள்ளி செல்லும் வயதுடைய சிறார்களுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கான மொத்த முதலீடு நடப்பாண்டில் ரூபாய் **645.76** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டம் முழுவதையும் தேசிய திட்டமாகக் கருதி **100** சதவீத நிதியுதவியை மானியமாக அளிக்குமாறு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் தரமான கல்வி அளிக்கப்படுவதை உறுதிசெய்ய, இவ்வரசு, ஒரு பெருந்திட்டத்தை வகுத்துள்ளது.

**40.** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க இந்த அரசு, தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த கல்விக்கடன் உதவியை 2002–2003 ஆம் ஆண்டிலிருந்து மானியமாக மாற்றுவது என்ற அரசின் முடிவு அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டம் அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது என்பது பெரும் மன நிறைவை அளிக்கக்கூடிய ஒன்றாகும். அவர்களுக்கு தரமான கல்வி

அளிப்பதற்கான ஏற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மாணவரில்லங்கள் கட்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது, 2003ஆம் ஆண்டிலும் தொடரும்.

**41.** இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5,000 பயனீட்டாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10,000 வீதம் மொத்தம் ரூபாய் 5 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் பெண்களுக்கு, சிறு வியாபாரம் தொடங்குவதற்காக, சிறுகடனாக ரூபாய் 20 கோடி வழங்கப்பட்டு வருகிறது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 1000 இளைஞர்களைத் தொழில் முனைவோர்களாக மேம்படுத்த ரூபாய் 2.50 கோடி நிதியுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**42.** வளர்ச்சித் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், அவைகள் பரவலாக்கப்படுவதற்கும், சிறந்த நிருவாக நடைமுறைகள் பெரிதும் பயனளிக்கும் என்று இவ்வரசு உறுதியாக நம்புகிறது. தூய்மையான, ஒளிவு மறைவற்ற பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை ஏற்படுத்த, தகவல் தொழில்நுட்பவியலின் அளப்பரிய வாய்ப்புகள் பயன்படுத்திக் கொள்ளப்படும். **2003** ஆம் ஆண்டில் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் தொடுதிரை தகவல் மையங்கள்(Touch Screen Kiosks) ஏற்படுத்தப்படும். இவ்வரசு, ஊழலுக்கு எதிரியாக தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளதுடன், தவறிழைக்கின்ற அதிகாரிகளுக்கு இடமளிக்காது செயல்படும். வெளிப்படையான மற்றும் பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை நிலைநாட்ட வழிசெய்யும், புதியதொரு, தகவல் பெறும் உரிமை சட்ட முன்வடிவு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**43.** தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு குறித்து அரசு உரிய கவனம் செலுத்தும். மாண்புமிகு முதலமைச்சர், **1008** ஏழை தம்பதியினரின் திருமணத்தை முன்னின்று

நடத்திவைத்து, அவர்களுக்கு அடிப்படை வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்கினார்கள். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலை, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை எடுத்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள், மாநில அரசு உரியகாலத்தில் தலையிட்டதால் கைவிடப்பட்டன. திருக்கோயில்களில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த அன்னதானத் திட்டம், மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம், தற்பொழுது 144 திருக்கோயில்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதான திட்டத்தை, மேலும் பல திருக்கோயில்களுக்குப் படிப்படியாக நீட்டிக்க இவ்வரசு திட்டமிட்டு வருகிறது.

44. 2002 அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை, முறையாகவும் மதிநுட்பத்துடனும் கையாண்டதற்காக இவ்வரசைப் பாராட்ட வேண்டும்.

மாநில அரசு எதிர்த்துப் போராட வேண்டியுள்ள கடுமையான நிதி இடர்பாட்டினைச் சமாளிப்பதில் தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்குமாறு அனைத்துப் பணியாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**45.** இந்த அரசு, **2001** மே திங்களில், ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, பல்வேறு பிரம்மாண்டமான பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வந்துள்ளது. நிதிப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள கடும் இடர்பாடு, தொடர்ந்து இரு பருவமழை பொய்த்ததாலும், கருநாடக மாநிலம், காவிரி நீரில் நமக்கு உரிமை உள்ள பங்கைத் தர மறுத்ததாலும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு ஆகியவை, எந்த அரசின் உறுதிப்பாட்டையும் குலைத்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் எஃகினையொத்த உறுதியும், கடும் இடர்பாடுகளை எதிர்கொண்ட நிலையிலும், அவரின் அயர்ந்து தளர்ந்துவிடாத தன்மையும், மாநிலத்தில் வளர்ச்சி நிருவாகம் சீரழியாமல் தடுத்துள்ளன.

**46.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான, செயல்துடிப்புமிக்க தலைமையின் கீழ் இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு மிகச் சிறந்தவைகள் அனைத்தும் கிடைக்கச் செய்வதில், வெற்றிபெறும் என்று நான் உறுதிபட நம்புகிறேன். இம் மாநில மக்களின் நலனுக்காகப் பணியாற்றும் உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வணக்கம்.**

**ஜெய் ஹிந்த்.**